# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை – 2015
## வரலாறு

**தரம் - 10** **நேரம் : 1.00 மணித்தியாலம்**

சுட்டெண்: ..........................................

புள்ளிகள் : ___ / 100

### பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **இவ்வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.**
- **01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

1) கி.பி. 4ஆம் நூற்றாண்டளவில் இலங்கை வரலாறு தொடர்பாக எழுதப்பட்ட இலக்கிய நூலாதாரம்
   i) தீபவம்சம் ii) மகாவம்சம் iii) சூளவம்சம் iv) போதிவம்சம்

2) மகாவம்சத்தின் உரை நூலான டீகாவ என்பதற்கு வழங்கப்படுகின்ற பெயர்.
   i) சமந்தபாஷா தீகாவ ii) நிகாய சங்கிராய iii) பரகும்பா சரித iv) வம்சத்தப்பகாசினி.

3) இலங்கை தொடர்பான வரலாற்றுத் தகவல்களைத் தனது தேச சஞ்சார அறிக்கையில் குறிப்பிட்ட அரபு நாட்டவர்
   i) பாகியான் ii) மெகஸ்தனிஸ் iii) இபன்பதூதா iv) சியுங்சாங்

4) நிசங்கமல்ல மன்னனால் பொறிக்கப்பட்ட இலங்கையின் மிக நீளமான கல்வெட்டு
   i) மிகிந்தலை கல்வெட்டு ii) கல்பொத்த கல்வெட்டு
   iii) கடலாதெனிய கல்வெட்டு iv) தோணிக்கல கல்வெட்டு

5) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்கள் வாழ்ந்த தாழ்நில உலர்வலய வெட்டவெளி வேட்டை இடங்களில் ஒன்று
   i) பண்டாவளை ii) பாகியன்கல iii) பெல்லன்பதிபெலஸ்ஸ iv) பட்ட தொம்பலன.

6) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் ஈரவலயத்தில் வாழ்ந்த மக்களின் பிரதான உணவு.
   i) உடும்பு ii) கீரி iii) காட்டுப்பன்றி iv) நத்தை

7) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் (12500 வருடங்களுக்கு முன்னர்) காட்டுப் பலா விதைகளை தீயில் சுட்டு சாப்பிட்டமைக்கான ஆதாரம் கிடைக்கப்பெற்றுள்ள குகை.
   i) பாகியன்கல குகை ii) கித்துள்கல பெலிலென குகை
   iii) பட்ட தொம்பலன குகை iv) சிகிரிய அலிகல குகை

8) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் வாழிட எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட உடரஞ்சாமடம அமைந்துள்ள மாவட்டம்
   i) இரத்தினபுரி ii) களுத்துறை iii) மாத்தறை iv) பதுளை

9) A பகுதியில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் வாழ்ந்த குடியிருப்புகளும் B பகுதியில் அவர்களுடைய தொழில்களும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| 1) கோபாலகாம | a) குயவர் |
| 2) கசீகாரகாம | b) இரத்தினம் அகழ்வோர் |
| 3) கும்பகாரகாம | c) இடையர் |
| 4) மணிகாரகாம | d) விவசாயி |

i) cbad  ii) cadb  iii) cdba  iv) cdab

10) ‘A’ பகுதியில் அரச சபை தலைவர்களினைக் குறிக்கும் பெயர்களும் B பகுதியில் அவர்களுடைய பொறுப்புக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| 1) அச அதெக | a) யானைப்பிரிவுத்தலைவர் |
| 2) ஹதி அதெக | b) காசு அச்சிடும் பிரிவின் தலைவர் |
| 3) ரூப அதெக | c) குதிரைப்பிரிவுத் தலைவர் |
| 4) பன அதெக | d) வர்த்தக நடவடிக்கைத் தலைவர் |

i) cbad  ii) cadb  iii) cabd  iv) cdab

11) பருமக முதலிய பிரமுகர்களால் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகின்ற கல்லறை மயானம்.
i) ஹல்துமுல்ல  ii) இபன்கட்டுவ  iii) பெரகல  iv) உடரஞ்சாமடம.

12) இல்லத்தலைவன் ஒருவன் பிக்குமாரின் சேமநலன் கருதி கற்குகை ஒன்றைச் சுத்தம் செய்து தானம் வழங்கிய தகவலைக் கூறும் கல்வெட்டு கண்டறியப்பட்ட இடம்.
i) பெரிய புளியன்குளம்  ii) சித்துல் பவ்வ
iii) கொத்கல்கந்தை  iv) உடரஞ்சாமடம

13) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் படகுத்துறையை நிர்வகிப்பவருக்கு வழங்கப்பட்ட பெயர்
i) கொதுறுகேனா  ii) பனபெடிக  iii) பதகு  iv) தொட்டபோஜக

14) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் குளத் தொகுதியைக் குறிப்பிடுவதற்கு வழங்கிய பெயர்.
i) பிடபிம்  ii) தண்டு வெட்ட  iii) வெவ்பிரபாதனய  iv) கெத

15) ஹோபிட்டிகம தூண் கல்வெட்டைப் பொறிப்பித்த மன்னன்
i) வசபன்  ii) 4ம் உதயன்  iii) மகாபராக்கிரமபாகு  iv) 4ம் மகிந்தன்

16) ‘A’ பகுதியில் மன்னர்களின் பெயர்களும் B பகுதியில் அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்களும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| 1) குட்ட கண்ண அபயன் | a) அலகபய மகாராஜா |
| 2) மகாசேனன் | b) காலிங்க சக்கரவர்த்தி |
| 3) முதலாம் காசியப்பன் | c) நரேஸ்வர. |
| 4) நிசங்க மல்லன் | d) மின்னேரித்தெய்வம் |

i) cadb  ii) cdba  iii) cbad  iv) cdab

17) சேனைப்பயிர்ச் செய்கை நடைபெறும் இடத்தில் உயர் மரம் ஒன்றில் கட்டப்பட்ட சிறு குடிசைக்கு வழங்கப்பட்ட பெயர்.
i) பெல ii) பிடபிம் iii) கெத iv) தண்டுவெட்ட

18) மஜ்ஜிம எனும் கம்மாளரைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு கிடைக்கப்பெற்ற இடம்.
i) அம்பாந்தோட்டை - மண்டகல ii) அம்பாந்தோட்டை - வெஹெரகெம
iii) பொலனறுவை - முதுகல்ல iv) பொலனறுவை - கந்தக்காடு

19) பண்டைய சமூகத்தில் யானையைப் பழக்கும் ஆசிரியருக்கும், குதிரை ஓட்டத்தைக் கற்பிக்கும் ஆசிரியருக்கும் வழங்கப்பட்ட பெயர்கள் முறையே.
i) தனு ஆசார்ய, அஸ்வ ஆசார்ய ii) ஹஸ்தி ஆசார்ய, அஸ்வ ஆசார்ய
iii) ஹஸ்தி ஆசார்ய, தனு ஆசார்ய iv) அஸ்வ ஆசார்ய, ஹஸ்தி ஆசார்ய

20) பசுக்களின் பாதுகாப்பிற்காகச் செய்யப்பட்ட சாந்தி பூஜை
i) ராஜ சூய யாகம ii) அஸ்வமேத யாகம்
iii) புத்திரகாமேஷ்டி யாகம் iv) பால்மடு யாகம்

21) புராதன காலத்தில் பன்னிரெண்டு மாதங்களைக் குறிப்பதற்கு கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்ட சொல்
i) தீதிய ii) மொஹுத்த iii) வச iv) தத

22) தலைமைப் பிக்குகளை அண்டி வாழும் மாணவப் பிக்குகளைக் குறிப்பிடப் பயன்பட்ட சொல்.
i) சதிவிஹுகரிய ii) தேரர் iii) பாணக iv) அந்தேவாசி

23) வஜ்ரசும்பட்ட எனும் பெயரினால் அழைக்கப்படும் இடிதாங்கி பொருத்தப்பட்டுள்ள விகாரை.
i) தூபராமய ii) ரூவான் வெலிசாய iii) அபயகிரி iv) ஜேத்தவனராமய

24) புராதன காலத்தில் "நியமஸ்தான" எனும் பெயரால் குறிப்பிடப்படும் குழு.
i) மருத்துவர் குழு ii) விவசாயிகள் குழு iii) வணிகர் குழு iv) அமைச்சர் குழு

25) கலாவாவியை அமைத்த மன்னன்
i) வசபன் ii) மகாசேனன் iii) 1ஆம் அக்கிரபோதி iv) தாதுசேனன்

26) இலங்கையின் தென்பகுதியில் அமைந்திருந்த கலாசாரத்தை காட்டும் கண்ணாடியாக விளங்கிய புராதன நகரம்
i) மகாநாககுல ii) சித்துல்பவ்வ iii) மாகம iv) கஜரகம

27) சத்மஹால் பிரசாதய எனும் ஏழடுக்கு மாளிகை அமைந்துள்ள இராசதானி
i) பொலனறுவை ii) அனுராதபுரம் iii) கோட்டை iv) யாப்பகூவ

28) கி.பி. 1232 இல் தம்பதெனியவைத் தலைநகராக்கிய மன்னன்.
i) 2ம் பராக்கிரமபாகு ii) புவனேகபாகு iii) 4ம் விஜயபாகு iv) 3ம் விஜயபாகு

29) "கலிகால சாகித்ய சர்வக்ஞ பண்டிதன்" எனும் புகழ்ப் பெயரால் அழைக்கப்பட்ட மன்னன்
i) 1ம் பராக்கிரமபாகு ii) 2ம் பராக்கிரமபாகு
iii) 4ம் பராக்கிரமபாகு iv) 6ம் பராக்கிரமபாகு

30) கரலியட்ட பண்டாரவின் ஆட்சிக்காலத்தில் கண்டி மீது படையெடுத்த சீதாவாக்கையின் மன்னன்
i) மாயாதுன்னை ii) 2ம் இராசசிங்கன்
iii) 1ம் இராசசிங்கன் iv) 1ம் விமலதர்மசூரியன்

31) கண்டி இராச்சியத்தில் புதியதோர் அரசவம்சத்தைத் தோற்றுவித்த மன்னன்
i) 2ம் விமலதர்மசூரியன் ii) 1ம் விமலதர்மசூரியன்
iii) 2ம் இராசசிங்கன் iv) செனரத்

32) கி.பி. 1638 இல் இரண்டாம் இராசசிங்கன் போர்த்துக்கேயரைத் தோற்கடித்த இடம்.
i) கன்னொறுவ ii) பலன iii) தந்துரே iv) ரந்தெனிவெல

33) கண்டி இராசதானியை ஆட்சி செய்த இறுதிச் சிங்கள மன்னனும், நாயக்க வம்ச முதல் மன்னனும் முறையே
i) 2ம் விமலதர்ம சூரியன், ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன்
ii) ஸ்ரீ விஜய இராஜசிங்கன், ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன்
iii) ஸ்ரீ விஜய இராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
iv) ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன், ஸ்ரீ விஜய இராஜசிங்கன்.

34) கண்டி இராசதானியில் போக்குவரத்துக்காக விதிக்கப்பட்ட வரி.
i) மடிகேபத்த ii) குருவேபத்த iii) ஹெந்தபத்த iv) ரீபத்த

35) கண்டி இராச்சியத்தில் ரட்ட எனும் பிரதேசங்களுக்குப் பொறுப்பான அதிகாரி
i) லியன ரால ii) உண்டிய ரால iii) ரட்டே ரால iv) திசாவை

36) கி.பி. 1453 இல் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்ட ஐரோப்பியர்களின் வர்த்தக நகரம்
i) வெனிஸ் ii) கொன்ஸ்தாந்திநோபிள் iii) மிலான் iv) ஜெனோவா

37) கி.பி. 1454 இல் அச்சியந்திரத்தைக் கண்டுபிடித்தவர்
i) கெப்லர் ii) கலிலியோ கலிலி
iii) நிக்கலஸ் கொப்பனிக்கஸ் iv) கூடன்பேர்க்

38) இத்தாலியின் கலைகளின் மத்திய நிலையம்
i) புளோரன்ஸ் ii) ஜெனோவா iii) வெனிஸ் iv) மிலான்

39) மனித உடலின் குருதிச் சுற்றோட்டத் தொகுதியைக் கண்டறிந்தவர்
i) பெரசல்ஸ் ii) வில்லியம் ஹார்வே
iii) மைக்கல் சர்வேட்டஸ் iv) ஐசக் நியூட்டன்

40) திரிசிங்களாதீஸ்வர எனும் பட்டப்பெயரைச் சூடிக்கொண்ட கண்டி மன்னன்
i) செனரத் ii) 1ம் விமலதர்மசூரியன்
iii) 2ம் இராசசிங்கன் iv) கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன்

(40 x 2 = 80 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை – 2015

## வரலாறு

**தரம் - 10** **நேரம் : 3.00 மணித்தியாலங்கள்**

சுட்டெண்: .............................................

**பகுதி** II

புள்ளிகள் : ____ / 100

**பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது.**
**பகுதி II இல் இருந்து எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**
**எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி I

1. அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றிடங்களைத் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றிடங்களைத் தரப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i). ஆனையிறவு, மாதோட்டம், ஹல்துமுல்ல, உடரஞ்ஞாமடம, பாகியன்கல, கிரிந்திஓயா, அனுராதபுரம், சிகிரியா அலிகல, நில்வளதித்த, சல்வத்தொட்ட

(10 x 1=10 புள்ளிகள்)

(ii). உரோம், இந்தியா, பிரித்தானியா, ஒல்லாந்து, சீயம், கொன்ஸ்தாந்திநோபின், ஜேர்மனி, கருங்கடல்

(8 x 1= 8 புள்ளிகள்)

ஆ)

i) மேலே A,B,C,D எனத் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை / நாடுகளை ஒழுங்குமுறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A- துட்டகாமினி மன்னனின் வெற்றிகளுக்கு அத்திவாரமிட்ட மன்னன்.
B- இலங்கையின் முதலாவது கத்தோலிக்க மன்னன்.
C- 2ம் பராக்கிரமபாகு காலத்தில் யாவா தேசத்தில் இருந்து வந்த படையெடுப்பாளன்.
D- தொலை நோக்கியைக் கண்டுபிடித்த, செயற்பாட்டு விஞ்ஞானத்தின் தந்தை எனப் புகழ் பெற்றவர்.

(4 x 1= 4 புள்ளிகள்)

* A,B ஆகிய படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை இலக்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii) 1) Aஎனக் காட்டப்பட்டுள்ள படத்தினைப் பெயரிடுக
2) இது கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?
3) இந்த உருவத்துடன் தொடர்புடைய மன்னன் யார்?
4) இதனைத் தயாரிக்கப் பயன்பட்ட உலோகம் எது?



A

(4 புள்ளிகள்)

(iii) 1) Bஎனக் காட்டப்பட்டுள்ள படத்தினைப் பெயரிடுக.
2) இது கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?
3) இது கண்டு பிடிக்கப்பட்ட இடத்துக்கு அருகிலுள்ள பிரபலமான நகரம் எது?
4) இது என்ன நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்டது?



B (4 புள்ளிகள்)

2) "இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலமக்கள் வெட்ட வெளிகளிலும் கற்குகைகளிலும் தமது வாழிடங்களை அமைத்து இருந்தனர்."

i) தாழ்நில ஈரவலயக் குகைகள் மூன்றினைப் பெயரிடுக.

(3 புள்ளிகள்)

ii) a) சிவப்பு நிறம் பூசப்பட்ட எலும்புக் கூட்டின் பகுதிகள் கண்டு பிடிக்கப்பட்ட குகை.

b) எலும்புக் கூடு வளைத்துப் புதைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்ட குகை.

(2+2 = 4புள்ளிகள்)

(iii) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

(iv) வரலாற்றுக் காலத்தில் பொது மக்கள் சவால்களை வெற்றி கொண்டமைக்கான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

(6 புள்ளிகள்)

3) "பண்டைய இலங்கையின் அரசியல் அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்தது"

i) பண்டைய காலத்தில் இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சிக்கு கமிக ஆற்றிய பணிகள் 3 தருக.

(3 புள்ளிகள்)

ii) பண்டைய இலங்கையில் குளத்தொகுதி ஒன்றை உருவாக்குவதற்கான நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii) பண்டுகாபய மன்னனின் அரசியல் சாதனைகளில் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

iv) இலங்கை நாட்டின் அரசியல் அதிகாரத்தை முறையான விதத்தில் உருவாக்குவதில் துட்டகைமுனுவின் அரும்பணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

(6 புள்ளிகள்)

4) "நாட்டின் அபிவிருத்திக்குச் சிறப்பான நல்லாட்சி அவசியமானது"

i) நாட்டின் நிர்வாகத்தைக் கொண்டு நடத்த உதவும் ஸ்தாபனங்கள் மூன்று தருக.

(3 புள்ளிகள்)

ii) மேல்வரும் பதங்களின் மூலம் குறிப்பிடப்படும் விடயங்கள் என்ன?

a) தசகம் எத்தன்

b) பஸவந்தி நாம சால (4 புள்ளிகள்)

iii) பண்டைய கால இலங்கை மன்னர்கள் அயல்நாடுகளுடன் திருமண, சமயத் தொடர்புகளைப் பேணி வந்தனர் என்பதற்குச் சான்றாதாரங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

iv) பண்டைய காலத்தில் நீதிமன்றங்களாக விளங்கிய சபாவின் பணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

(6 புள்ளிகள்)

5) "பண்டைய கால மக்களின் பொருளாதார நடவடிக்கைகள் சூழலுடன் இயைபுபட்டிருந்தன"

i) சேனைப் பயிர்ச் செய்கைக்காக நிலத்தைத் தயார்படுத்தும் செயற்பாட்டின் படிமுறைகள் மூன்றினைத் தருக.

(3 புள்ளிகள்)

ii) சேனைப்பயிர்ச் செய்கைக்காக அரசர்களால் அறவிடப்பட்ட இருவரிகளைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii) நவதெனி சேனை என்றால் என்ன? சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

iv) பொலநறுவைக் கால மன்னர்கள் நீர்ப்பாசனத்துக்கும் பயிர்ச்செய்கைக்கும் அரும்பணி ஆற்றினார்கள் என்பதற்கு இரு மன்னர்களைச் சான்றாகக் கூறி விளக்குக.

(6 புள்ளிகள்)

6) "முற்காலத்தில் இருந்தே இலங்கையில் பல்வேறு கலாசாரங்களைப் பின்பற்றுகின்ற மக்கள் வாழ்ந்திருந்தனர்"

i) வியாபாரத்தின் பொருட்டு இலங்கை வந்த அன்னிய இனத்தவர்கள் மூன்று பேரைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

ii) மேற்குறிப்பிட்ட சொற்பதங்களின் மூலம் குறிப்பிடப்படும் விடயங்களைத் தருக.

a) புகய:-

b) வணிஜ:-

(4 புள்ளிகள்)

iii) தென்னிந்தியாவுக்கு அண்மையில் இலங்கை அமைந்திருந்ததனால் இந்து சமயத் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. என்பதை இரு உதாரணங்கள் மூலம் விளக்குக.

(5 புள்ளிகள்)

iv) இலங்கையில் இனங்களுக்கு இடையிலான இணக்கப்பாட்டைப் பேணுகின்ற நிலையமாக சிவனொளிபாதமலை விளங்குகின்றது என்பதனை மூன்று உதாரணம் மூலம் விளக்குக.

(6 புள்ளிகள்)

7) "பண்டைய இலங்கை மக்களின் தொழிநுட்ப அறிவு எமது அருஞ் செல்வங்களாக போற்றப்பட வேண்டியது"

i) மிகப் பண்டைய காலந் தொடக்கம் கட்டடக்கலை சிறந்து விளங்கியமைக்கு அனுராதபுரத்தில் காணப்படுகின்ற விகாரைகள் மூன்றினை தருக.

(3 புள்ளிகள்)

ii) நில அளவீட்டுக்கும் விவசாய அளவீட்டுக்கும் பயன்படுத்தப்பட்ட அளவை முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii) புராதன கால கலிங்கற்றொட்டியில் பயன்படுத்தப்பட்டிருந்த தொழில்நுட்ப சிறப்பினை இரண்டு உதாரணங்களைக் கூறி விளக்குக.

(5 புள்ளிகள்)

iv) முன் வரலாற்றுக் காலத்தில் மக்களால் பயன்படுத்தப்பட்டிருந்த விஞ்ஞான தொழில்நுட்ப விடயங்களில் உள்நாட்டுத் தனித்துவம் வெளிப்படுகின்றது என்பதனை மூன்று துறைகளை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

(6 புள்ளிகள்)

8) “இன்றைய உலகில் காணப்படும் சமுதாயங்களில் ஒன்றுக்கொன்று வேறுபட்ட அறிவுத் தொகுதியைக் காணமுடிகின்றது“

i) வரிச்சட்டத்தின் மூலம் அறவிடப்பட்ட முக்கியமான மூன்று வரிகளைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

ii) மேல்வரும் சட்டங்களை இயற்றிய மன்னர்களைக் குறிப்பிடுக.

a) மிருகங்களை எவரும் கொல்லக்கூடாது.

b) நீர் நிலைகளில் வாழும் உயிரினங்களைக் கொலை செய்யக் கூடாது.

(4 புள்ளிகள்)

iii) முற்கால இலங்கை சமுதாயத்தில் பெண்கள் உயர்நிலையில் வைத்து மதிக்கப்பட்டார்கள் என்பதனை இரு உதாரணம் மூலம் விளக்குக.

(5 புள்ளிகள்)

iv) பண்டைய கால நகரமயமாக்கலில் அடையாளம் காணப்படுகின்ற சிறப்பியல்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

(6 புள்ளிகள்)

9) ”இரண்டாம் நகரமயமாக்கல் காலத்தில் நாடு பல்வேறு துறைகளிலும் மேன்மை அடைந்தது.”

i) பின்வரும் இராசதானிகளைத் தலைநகராக்கிய மன்னர்களைப் பெயரிடுக.

a) யாழ்ப்பாணம்

b) கம்பளை

c) கோட்டை

(3 புள்ளிகள்)

ii) கம்பளைக் காலத்தில் அரசுரிமையைப் பெற்றுக் கொண்ட இருமுறைகளைத் தருக.

(4 புள்ளிகள்)

iii) முதலாவது நகராக்கம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணிகள் 5 தருக.

(5 புள்ளிகள்)

iv) இரண்டாம் பராக்கிரமபாகுவின் சாதனைகளை மூன்று உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(6 புள்ளிகள்)

10) “செங்கடகல நகரத்தை மையமாகக் கொண்ட கண்டி இராசதானி இயற்கை அரண்களால் சூழப்பட்டிருந்தது.”

i) கீழ்வரும் அதிகாரிகளின் பொறுப்புக்களைத் தருக.

a) கஜநாயக்க நிலமே -

b) தியவடன நிலமே -

c) பத்வடன நிலமே -

(3 புள்ளிகள்)

ii) கண்டி இராச்சியத்துக்குட்பட்ட இரட்டைகள் நான்கு தருக.

(4 புள்ளிகள்)

iii) கண்டி இராசதானியில் விதிக்கப்பட்ட தண்டனைகள் ஐந்து தருக.

(5 புள்ளிகள்)

iv) கண்டி இராசதானியின் பொருளாதாரக் கட்டமைப்பினை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(6 புள்ளிகள்)